# நூலகங்களினது உறுதிமொழியும் அறிவுபூர்வமான சுதந்திரமும்

**IFLA** (அனைத்துலக நூலகங்களினதும் கல்வி நிறுவனங்களிதும் கூட்டிணைப்பு) ஆனது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகரிக்கப்பட்டதிற்க்கிணங்க மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் கருத்துச்சுதந்திரந்தை அளிக்கவும் தனது ஆதரவை வழங்கும்.

**IFLA** ஆனது ஒவ்வோர் மனிதனுக்கும் அறிவைத் தேடிச்செல்லவும், தனது அறிவுபூர்வமான ஆற்றலால் நல்ல செயல்பாடுகளில் ஈடுபடவும், தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும் உரிமையுண்டு என உறுதிமொழிகின்றது.

**IFLA** கருதுவதாவது அறிவைத் தேடிச்செல்லுதலும், தனது எண்ணங்களையும் கருத்துக் -
களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்தலும் ஒரே விடயத்தின் இரண்டு பக்கங்கள் ஆகும்.
சுதந்திரமான எண்ணங்களும் நேர்மையுமே அறிவைத் தேடுதலுக்குரிய உரிமையாக கொள்ளப்படும். சுதந்திரமான எண்ணங்களையும் கருத்துச்சுதந்திரந்தையும் வளர்ப்பதற்க்கு எந்த தகவல்களையும் சேகரிக்க சுதந்திரமான பாதை அமைக்கப்படவேண்டும்.

**IFLA** அனைத்து நூலகங்களும் மற்றைய தகவல்நிலையங்களும் இந்த அறிவுபூர்வமான சுதந்திரத்தை பேணிக்காப்பது அவர்களின் கட்டாய பணியென உறுதியாயுள்ளது.

**IFLA** இக்காரணங்களால் நூலகங்களையும் அங்கு பணிபுரியும் ஊழியர்களையும் கேட்டுக்கொள்வதாவது அறிவுபூர்வமான சுதந்திரத்தை பேணிக்காக்கவும், நூலகத்தைத்தில் எந்த மறைவும் இல்லாது எந்த தகவல்களை எவரும் அறிந்து கொள்ளுதலுக்கோ தமது கருத்துச் சுதந்திரத்தை வெளிப்படுத்தலுக்கோ எந்த தடையும் இல்லாது பார்த்துக் கொள்ளவேண்டும்.

**IFLA** தனது அங்கத்தவர்களையும் அதனுடன் சேர்ந்து உழைக்கும் மற்றைய நிறுவனங்களையும் தனது கருத்துகளில் ஒன்றி தனது கருத்துக்களை நடைமுறைப்படுத்த வற்புறுத்துகின்றது.
அவற்றைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

- நூலகங்கள் தகவல்களை, கருத்துக்களை - எண்ணங்களை, கற்பனையைச் செழிமைப்படுத்தும் வழமான வேலைத்திட்டங்களை அளிக்க வேண்டும். ஆறிவுக்கும், எண்ணங்களுக்கும், கலாச்சாரத்திற்க்கும் ஓர் வாயில் கதவாக அமைய வேண்டும்.
- நூலகங்கள் வாழ்நாள் முழுவதும் கற்பதற்க்குரிய ஊடகத்தையும் சுயமாக முடிவெடுக்கும் திறமையை வளர்க்கவும், ஒரு தனிப்பட்டவரின் அல்லது ஒரு குழுவினரது கலாச்சாரத்தை வளர்க்ப் பாடுபடவேண்டும்.

- நூலகங்கள் தனிப்பட்வரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அடிப்படையான குடியுரிமைகளை நிலைநாட்வும் அறிவுபூர்வமான சுதந்திரத்தை வளர்க்கவும் தனது ஆதரவை வழங்கும்.
- நூலகங்களுக்கு அறிவுபூர்வமான நடவடிக்கைகளை வளர்க்கவும், அறிவைத் தேடிச்செல்லும் ஊடகத்தை அளிக்கவும் வேண்டிய பொறுப்பும் அதற்க்கான வழிவகைகளை தேடும் கடமையும் உண்டு. எனவே நூலகங்கள் எல்லாத்துறைகளிலும் சமுதாயத்தின் பெரும் பாகத்தினரையும் மற்றையோரையும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் வேண்டிய தகவல்களை அளிக்கம் பேணிப்பாது காக்கவும் வேண்டும்.
- நூலகங்கள் வழங்கக்கூடிய விடயதானங்கள் அறிவுசார்ந்த, பாடவிதானத்துடன் கூடிய ஒன்றிய தெரிவுகளாய் இருக்கவேண்டுமே தவிர அரசியல் – சமய – ஒழுக்கமுறைகளை திணிக்கும் வகையாக அமையக் கூடாது.
- நூலகங்கள் விடயதானங்களை வழங்க, ஒழுங்கு முறைப்படுத்த, சுலபமாக பரவலாக்க
  வேண்டிய அதேவேளையில் எந்த கண்டங்களுக்கும் எதிராக செயல்படவேண்டும்.
- நூலகங்கள் அனைத்து வாசகர்களும் எந்த பாகுபாடுமின்றி விடயதானங்களைப் பெற வாய்ப்பும் வசதியும் செய்தளிக்க வேண்டும். எவரும் இனம், சமயக்கோட்பாடுகள், பால், வயது, மற்றும் எந்தக் காரணங்களைக் கொண்டு எவ்வித வேறுபாடும் காட்டுப்படக் கூடாது.
- நூலகத்திற்க்கு வரும் வாசகர்கள் தங்களைப்பற்றிய தகவல்களை தனித்துவமாகவும் இரகசியமாகவும் வைத்திருக்க உரிமையுண்டு. நூலகங்களோ அல்லது அங்கு கடமையாற்றும் ஊழியர்களோ ஒர் வாசகரைப்பற்றிய அல்லது அவர் காட்டும் விடயதானங்கள் பற்றிய தகவல்களையோ யாருக்கும் தெரியப்படுத்தப்படக் கூடாது.
- பொதுமக்களின் வாயிலாக அரசநிதியினால் முதலீடு செய்யப்பட்ட நூலகங்கள் எப்பொழுதும்

  அறிவுபூர்வமான சுதந்திரத்தைப் பேணும் கோட்பாடுகளை கொண்டிருக்க வேண்டும்.
- நூலகங்களும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் மேற்கூறிய கோட்பாடுகளைப் பேணிக்காக்க வேண்டும்.
- நூலகர்களுக்கும் மற்றைய தொழில்முறைசார்ந்த நூலகங்களுக்கும் தங்களுடைய ஊழியரிகளினதும் வாசகர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு உண்டு. இந்தப் பொறுப்புகளுக்கிடையே முரண்பாடுகள் தோன்றின் அதை நல்ல முறையில் தீர்த்து வைக்க வேண்டியதும் அவர்கள் கடமையே.